# கிருஷ்ணகிரிக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரும் 25-ம் தேதி வருகை முன்னேற்பாடு பணிகள்

## மதியழகன் எம்.எல்.ஏ. நேரில் ஆய்வு



**கிருஷ்ணகிரி,செப்.21-**

கிருஷ்ணகிரிக்கு வருகிற 25-ம் தேதி அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருவதையொட்டி முன்னேற்பாடு பணிகளை கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. நேரில் ஆய்வு செய் தார். கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்திற்கு வருகிற 25ம் தேதி திமுக இளைஞர் அணி செயலாளரும், தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுதுறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் வருகிறார்.

அன்றைய தினம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள திமுக மூத்த நிர்வாகிகளுக்கு பொற்கிழி வழங்குதல் நிகழ்ச்சி மற்றும் பல்வேறு கட்சி நிகழ்ச்சிகளில் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கிறார். அதையொட்டி அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு பிரமாண்ட வரவேற்புவிழாமற்றும் பொற்கிழி வழங்கும் விழா கிருஷ்ணகிரி சென்னை சாலையில் உள்ள தேவராஜ் மஹாலில் நடைபெறு வதையொட்டி விழா நடைபெறும் இடத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது மாவட்ட அவைத் தலைவர் தட்ரஅள்ளி நாகராஜ், பொருளாளர் கதிரவன், பொதுக்குழு உறுப்பினர் அஸ்லம், மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய சங்கங்களுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்காக ரூ.50 லட்சத்திற்கான காசோலை

## கலெக்டர் செ.கார்மேகம் வழங்கினார்



**சேலம்,செப்.21-**

சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய சங்கங்களுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்காக ரூ.50 இலட்சத்திற்கான காசோலையினை கலெக்டர் செ.கார்மேகம், (20.09.2023) மாவட்ட ஆட்சியரகத்தில் வழங்கினார். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2023-24-இன் அறிவிப்பின்படி, சேலம் மாவட்ட ஒன்றியங்களின் பால் உற்பத்தியை அதிகரித்திட ஏதுவாக மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் சார்பில் வங்கிகள் மூலம் கறவை கடன் வழங்கும் வகையில் காடையாம்பட்டி ஒன்றியம், காருவள்ளி பகுதியைச் சார்ந்த 50 விவசாயிகளுக்கு தலா 2 கறவை மாடுகள் வாங்குவதற்காக தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூ.50 இலட்சம் வங்கிக் கடனுதவிக்கான காசோலையினை கலெக்டர் வழங்கினார். இந்நிகழ்வின்போது, ஆவின் பொது மேலாளர் மரு.இராஜசேகர் எஸ்.கரிசெட்டி, உதவி பொது மேலாளர்கள் மரு.கே.ரமேஷ், புவனேஸ்வரி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதுநிலை மண்டல மேலாளர் வி.ராமகிருஷ்ணன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# பர்கூர் ஒன்றியத்தில் அதிமுக பூத் கமிட்டி ஆலோசனைக் கூட்டம்



**கிருஷ்ணகிரி,செப்.21-**

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒப்பதவாடி, மல்லப்பாடி, காரகுப்பம் உள்ளிட்ட கிராமங்களில் அதிமுக பூத்து கமிட்டி ஆலோசனைக் கூட்டம் முன்னாள் பர்கூர் சட்டமன்ற உறுப்பினரும் ஒன்றிய கழகச் செயலாளருமான சி.வி.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முன்னாள் ஊராட்சி செயலாளர் எம்.முனுசாமி, கிளைச் செயலாளர் ஆர். சம்பத், முன்னாள் முன்னாள் கவுன்சிலர் சங்கர், கிளை செயலாளர்கள் முத்து, கார்த்திக்தீபன், சண்முகம், பாலகிருஷ்ணன், அனு முத்து, குழந்தைவேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய செயலாளர் ஜெயபால், மாவட்ட அவைத் தலைவர் பெருமாள், வர்த்தக அணி மாவட்ட செயலாளர் தூயமணி, மாவட்ட மாணவரணி செயலாளர் வெற்றிச்செல்வன் ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார். முன்னாள் துணைத் தலைவர் தங்கராஜ், சுப்பன்( எ)சின்னபையன், கிளை தலைவர் மாதையன், முன்னாள் கிளை செயலாளர் சுப்பிரமணி, சீனிவாசன், கிளை பொருளாளர் சுப்பன், கிளை துணை செயலாளர் செல்வம், மகளிர் அணி கிளை செயலாளர் பூவரசி, சுதா, தினகரன், அருள்முருகன், வெங்கடாசலம் உள்பட ஏராளமான நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர். இறுதியில் பூத் கமிட்டி பொறுப்பாளர்களுக்கு கையேடுகளை வழங்கினர்,

# பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் விழிப்புணர்வு பேரணி

## கலெக்டர் ச.உமா தொடங்கி வைத்தார்




**நாமக்கல்,செப்.21-**

பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" திட்டமானது குறைந்து வரும் பெண்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், பெண் குழந்தைகளின் பாலின சமநிலையை மேம்படுத்திடவும், பெண் குழந்தைகள் கல்வி கற்பதை உறுதி செய்திடவும். பெண் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிபடுத்தவும், பாலின பாகுபாட்டை நீக்கவும், மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட திட்டமாகும். இத்திட்டம் ஆண், பெண் குழந்தை விகிதத்தை சமன்படுத்துவதற்காக 2014 அக்டோபர் மாதம் முதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டமானது பெண் குழந்தைகளின் அதிகாரத்தையும், பாதுகாப்பையும், இயல்பாக வாழ்வதற்காக உத்தரவாதமளிக்கவும் கூட்டுறவான அனைத்து தரப்பு சங்கமாகக் கூடிய முயற்சிகளுக்காகவும் இந்திய அரசு பேட்டி பச்சாவ் பேட்டி படாவ்' (பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் 2018 முதல் இத்திட்டம் செயல்படுத்தபட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதத்தை உயர்த்தியதற்காக ஒருமுறை தேசிய விருதும், இருமுறை மாநில அரசின் விருதும் பெற்றுள்ளதை தொடர்ந்து 2022-2023 நிதியாண்டிற்கான இத்திட்டத்தின் துவக்கமான பெண் குழந்தை பாதுகாப்பை உறுதி செய்யவும், பெண் குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்திற்காகவும், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசினர் மகளிர் கலைக்கல்லூரியில் விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் மருத்துவர் ச.உமா, (20.09.2023) கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இவ்விழிப்புணர்வு பேரணியானது நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் தொடங்கி, மணிக்கூண்டு பேருந்து நிலையம் வழியாக 'நாமக்கல் காவல்நிலையம் வரை சுமார் 2 கி.மீ தூரம் வரை சென்றடைந்தது. இப்பேரணியில் சுமார் 300 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகள் கலந்து கொண்டு, விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியவாறு பேரணியாக சென்றனர். இந்நிகழ்ச்சியில், மாவட்ட சமூக நல அலுவலர் (பொறுப்பு) க.சவிதா, துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் கல்லூரி மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தருமபுரி நகராட்சி பகுதிகளில் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

## கலெக்டர் கி.சாந்தி நேரில் ஆய்வு



**தருமபுரி,செப்.21-**

வருகின்ற வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, மழைநீர் தேங்கா வண்ணம் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கலெக்டர் கி.சாந்தி, (20.09.2023) தருமபுரி நகராட்சி பகுதிகளில் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

தருமபுரி நகராட்சி வார்டு எண்.26-இல் கொல்லஅள்ளி ரோடு பகுதியில் மழைநீர் தேங்கும் இடங்களை கலெக்டர் கி.சாந்தி, நேரில் சென்று பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொண்டார்கள். நெடுஞ்சாலைத் துறை கட்டுப்பாட்டில் உள்ள சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து குமாரசாமிபேட்டை, பென்னாகரம் ரோடு, 10-வது வார்டில் தேசிய நெடுஞ்சாலைத் துறை கட்டுப்பாட்டில் உள்ள சாலையின் குறுக்கே கல்வெட்டு அமைக்கும் பணியினை கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வுசெய்து, பணியினை விரைவாக முடித்திட அறிவுறுத்தப்பட்டது. மேலும், கலெக்டர் தருமபுரி நான்கு ரோடு பகுதியில் சரி செய்து கொண்டிருந்த பாதாள சாக்கடை இணைப்பு பணியினை நேரில் ஆய்வு செய்தார்கள். பின்னர், வருகின்ற வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, நகராட்சி பகுதிகளில் மழைநீர் தேங்கா வண்ணம் தேவையான பாதுகாப்பு மற்றும் முன்னேற்பாடு பணிகளை விரைந்து முடிக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுத்தினார்கள். இந்த ஆய்வில் நகராட்சி ஆணையாளர் புவனேஷ்வரன், நகராட்சி பொறியாளர் புவனேஷ்வரி, துப்புரவு அலுவலர் ராஜரத்தினம், நெடுஞ்சாலை துறை பொறியாளர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இறைச்சி கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்த புதிய வாகனம்

## பேரூராட்சி தலைவர் தகவல்



**கிருஷ்ணகிரி,செப்.21-**

கிருஷ்ணகிரி மாவட்டம், பருகூர் தேர்வு நிலை பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள இறைச்சி கடைகளின் இறைச்சி கழிவுகளை தினசரி சேகரித்து அப்புறப்படுத்த பருகூர் பேரூராட்சி மூலம் பிராய்லர் வேஸ்ட் என்னும் வாகனம் ஏற்பாடு செய்யப்பட்டு இறைச்சி கழிவுகளை சேகரிக்கும் பணியினை செயல் அலுவலர் த.செந்தில்குமார் மற்றும் பேரூராட்சி தலைவர் ச.சந்தோஷ்குமார் முன்னிலையில் துவக்கி வைக்கப்பட்டது.

மேலும் இறைச்சி உரிமையாளர்களுக்கு தினசரி இறைச்சி கழிவுகளை சேகரிக்க வரும் வாகனத்தில் மட்டுமே கழிவுகளை ஒப்படைக்க வேண்டும். அதனை தவிர்த்து இறைச்சி கழிவுகளை பொது இடங்கள், நீர் நிலைகள் மற்றும் திறந்த வெளியில் கொட்டினால் ரூ.10,000/- முதல் ரூ.1,00,000/- வரை அபராதம் விதிக்கப்படும் என பேரூராட்சி நிர்வாகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் பருகூர் பேரூராட்சி பணியாளர்கள் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# தர்மபுரி மாவட்டத்தில் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் ஆய்வு

**தர்மபுரி,செப்.21-**



தர்மபுரி மாவட்டம், மாநில சுகாதாரத் துறை அமைச்சர் மற்றும் உணவு பாதுகாப்பு துறை ஆணையர் மாநிலம் முழுவதும் உள்ள அசைவ உணவகங்கள்,துரித உணவகங்கள் மற்றும் இறைச்சி கடைகளில், சவர்மா, தந்தூரி சிக்கன், கிரில்டு சிக்கன் மற்றும் சமைத்த, சமைக்காத இறைச்சி, துரித உணவுகள் ஆய்வு செய்து உணவு பாதுகாப்பு விதிமுறைகள் சரியாக பின்பற்றப்படுகின்றனவா, இறைச்சி உள்ளிட்ட உணவுப் பொருள்கள் தரமாகவும், உரிய தகுதி உடையவனாக எனவும் குளிர்பதன பெட்டி, ப்ரிட்ஜர் முறையாக பராமரிக்கப்படுகின்றனவா கண்காணித்து தவறு இருக்கும் பட்சத்தில் நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க உணவு பாதுகாப்பு துறைக்கு உத்தரவிட்டுள்ளனர். இதன் அடிப்படையில் தர்மபுரி மாவட்ட கலெக்டர் அறிவுரைப்படி, மாவட்ட உணவு பாதுகாப்பு துறை நியமன அலுவலர் மருத்துவர் ஏ.பானுசுஜாதா, எம்.பி.,பி.எஸ்., மேற்பார்வையில் மாவட்ட முழுவதும் தொடர்ச்சியாக உணவு பாதுகாப்பு அலுவலர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக பாலக்கோட்டில் உள்ள அசைவ உணவகங்கள், துரித உணவகங்கள், தாபாக்கள் மற்றும் இறைச்சி கடைகளில் காரிமங்கலம் மற்றும் பாலக்கோடு ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் கே.நந்தகோபால், உள்ளிட்ட குழுவினர் பாலக்கோட்டில் தர்மபுரி ரோடு, தக்காளி மார்க்கெட், எம்.ஜி. ரோடு, பைபாஸ் மற்றும் புறவழிச் சாலை, சுற்று வட்டார பகுதியில் உள்ள உணவகங்களில் திடீர் ஆய்வு செய்தார். சுமார் 15க்கும் மேற்பட்ட உணவகங்களில் ஆய்வு செய்ததில் மூன்று உணவகங்களில் இருந்து நாள்பட்ட இறைச்சியும், குளிர் பதன பெட்டியில் வைத்திருந்த சமைத்த இறைச்சி 10 கிலோ அளவிலானது மற்றும் வேக வைத்த கெட்டியான நிலையில் இருந்த பருப்பு 5 கிலோ அழிக்கப்பட்டது. மேலும் இரண்டு உணவகங்களில் இருந்து தரம் குறைவான மையோனஸ் மற்றும் காலாவதியான பால், பட்டர் பாக்கெட்டுகள், சோயா சாஸ் உள்ளிட்டவை 5 லிட்டர் அளவிலானது பறிமுதல் செய்து அப்புறப்படுத்தப்பட்டது. ஆய்வின் போது ஒரு டீக்கடையில் இருந்து தேயிலை பரிசோதித்ததில் கலப்படம் கண்டறிந்து பறிமுதல் செய்து அழிக்கப்பட்டது. மேற்படி விதிமுறை மீறிய உணவாக உரிமையாளர்கள் மற்றும் டீக்கடைக்காரர் என ஐந்து நபர்களுக்கு தலா ஆயிரம் விதம் ஐந்தாயிரம் அபராதம் விதிக்க மாவட்ட நியமன அலுவலர் அறிவுறுத்தலின் பேரில் உரிய சலான் படிவத்துடன் உடன் எச்சரிக்கை நோட்டீஸ் அளிக்கப்பட்டது. மேலும் உணவகங்களில் இறைச்சி மற்றும் மூலப்பொருள்கள் தரமானதாகவும் உரிய நாளுக்குள் பயன்படுத்த தக்க வகையிலும் இருக்க வேண்டும். மேலும் உணவு பாதுகாப்பு விதிமுறைகள் முறையாக பின்பற்ற வலியுறுத்தப்பட்டது. சமையலறை மற்றும் குளிர்பதன பெட்டி, ப்ரிசர் உள்ளிட்டவை அடிக்கடி கண் கா ணித் தி ட வும் அனைத்து உணவகங்களும் உரிய உணவு பாதுகாப்பு உரிமம் பெற்று நுகர்வோர் காணும் வகையில் மாட்டி வைக்க அறிவுறுத்தப்பட்டது. ஆய்வுகள் மற்ற பகுதிகளிலும் தொடர நியமன அலுவலர் உத்தரவிட்டுள்ளதாக உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் தெரிவித்தார்.

# மழைகாலம் தொடங்குவதால் தொற்று நோய் பரவாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்: கவுன்சிலர்கள் கோரிக்கை

**சென்னை செப் 21-**

மழைகாலம் தொடங்குவதால் தொற்று நோய் பரவாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வளசரவாக்கம் மண்டல குழு கூட்டத்தில் கவுன்சிலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.வளசரவாக்கம் மண்டல அலுவலகத்தில் மாமன்ற உறுப்பினர்கள் வார்டு குழு கூட்டம் மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மதுரவாயல் சட்ட மன்ற உறுப்பினர் காரம்பாக்கம்.க.கணபதி பங்கேற்று கவுன்சிலர்களின் குறைகளை கேட்டறிந்தார்.

இந்த கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர்கள் பேசியதாவது:-144 வது வார்டு திமுக கவுன்சிலர் எம்.இ.ஸ்டாலின் பேசும் போது :-எனது வார்டுக்கு உட்பட்ட மதுரவாயல் பிள்ளையார் கோயில் தெரு, பெருமாள் கோயில் தெரு, உள்ளிட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் இணைப்பு இல்லை , ஆக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.மேலும் எம்.இ ஸ்டாலின் கூறுவகையில் ஐந்து நாட்களுக்கு ஒரு முறை லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதால் , பிளாஸ்டிக் தொட்டிகளில் தண்ணீர் சேமித்து வைத்து பயன்படுத்திவருகின்றனர்.இதனால் டெங்கு காய்ச்சல் அதிகரித்துள்ளது. இதற்கு தீர்வுகாண வேண்டும் என்றார்.

இதே போல் 147 வது திமுக கவுன்சிலர் ரமணி மாதவன் பேசியதாவது:- மதுரவாயல் கிருஷ்ணா நகர் உள்ளிட்ட பகுதிகளில் அடிக்கடி மின் தடை ஏற்பட்டு வருகிறது. இதனால் அங்கு வசிக்கும் மக்கள் அவதிக்கு உள்ளகியுள்ளனர்.மின் வாரிய அதிகாரிகள் போனை எடுப்பத்தில்லை .

மேலும் சிதமடைந்த மின் கம்பங்களை மழை காலத்திற்கு முன்பு சீர்மைக்க அமைக்க வேண்டும் . உடனடியாக மின் வாரிய ஊழியர்கள் , அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால் பெரும் விபத்தைக்களை தவிர்க்கலாம் .என்றார் அவர்.

இதில் 148 வது வார்டு அமமுக கவுன்சிலர் வி.வி.கிரிதரன் பேசியதாவது:-எனது 148 வது வார்டுக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் குடிநீர் மற்றும் பாதள சாக்கடை பணிகள் முடிந்த சாலைகளில் தார் சாலை அமைக்க சீர் செய்யப்படும் போது ,குடிநீர், கழிவு நீர் குழாய் சேதமடைந்த விடுகிறது.இதனால் பணிகள் கிடப்பில் போட வேண்டிய நிலை உள்ளது.காமராஜர் சாலை , மேட்டுகுப்பம், பிரதான சாலை உள்ளிட்ட பகுதிக்களில் புதிய மின் கம்பங்கள் போட பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

இதே போல் 152 வது வார்டு திமுக கவுன்சிலர் பாரதி பேசியதாவது:-எனது வார்டில் மெட்ரோ ரயில் பணியால் அடிக்கடி குடிநீர் குழாய் சேதமடைந்து வருகிறது.இதனால் மாதத்தில் பல நாட்களில் வீடுகளுக்கு குடிநீர் கிடைப்பதில்லை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் . அத்துடன் பாதாள சாக்கடைகள் சேதமடைந்த காரணத்தால் கழிவு நீர் குடிநீரில் கலந்து வருகிறது. இதனால் நோய் தொற்று அபாயம் ஏற்பட்டுள்ளது. என்று கூறினார். முடிவில் பேசிய மண்டல குழு தலைவர் நொள்ம்பூர் வே.ராஜன் மாமன்ற உறுப்பினர்கள் உங்களது கோரிக்கை களுக்கு நடவடிக்கை எடுக்க மேயர் பிரியாவிடம் வலியுறுத்திகிறேன் என்று கூறினார்.

# நாளை மின்சாரம் நிறுத்தம்

**ஓமலூர்,செப்.21-**

சேலம் மாவட்டம் ,ஓமலூர் கோட்டம், தொப்பூர் துணை மின் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் காரணமாக 22 .9 .2023 அன்று நடைபெற இருப்பதால் அன்று காலை 9:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை கீழ்கண்ட பகுதிகளில் மின்விநியோகம் இருக்காது. தொப்பூர், செக்காரப்பட்டி, கம்மம்பட்டி, வெள்ளார், எருமப்பட்டி, குண்டுகள், ஜோடுகுளி, தளவாய் பட்டி எலத்தூர், சென்னா ரெட்டியூர், கொண் ரெட்டியூர், மூக்கனூர் தீவட்டிப்பட்டி ,சோழியானூர், ஆகிய பகுதிகளுக்கு மின் விநியோகம் இருக்காது என்று ஓமலூர் செயற் பொறியாளர் எஸ். சங்கர சுப்பிரமணியன் தெரிவித்தார்.

**கனம் சேலம் மாவட்ட சிறப்பு சார்பு நீதிபதி நீதிமன்றம் எண். 1**

**I.A. No. 1720 of 2022 in M.C.O.P. No. 122/2020**

சதாம் உசேன், த/பெ. சாஜகான்,
C/o. சசிதரன்,
எண். 56, பச்சப்பிள்ளை தெரு,
கன்னங்குறிச்சி, சேலம்-8.
........ மனுதாரர் / மனுதாரர்
/ இடையே /
M. ராஜா, த/பெ. முருகன்,
மதஹள்ளி அஞ்சல்,
பென்னாகரம், தர்மபுரி மாவட்டம்.
...1ம் எதிர்மனுதாரர்/
1ம் எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி வழக்கானது 1-ம் எதிர்மனுதாரர் தங்கள் வருகைக்காக வருகின்ற 29-09-2023 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று காலை 10 மணிக்கு 1-ம் எதிர்மனுதாரராகிய தாங்கள் நேரிலோ (அ) வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி மேற்படி நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளவும். தவறினால் தங்கள் பேரில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

// கோர்ட்டர் உத்திரவுபடி //
**J. SUDARSAN**, B.A., B.L.,
Advocate, Salem.

**சேலம் மாவட்ட குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 4**

**S.T.C. No. 2067/2018**

V.C. ரவிச்சந்திரன்,
த/பெ. (லேட்) சின்னையா
..... புகார்தாரர்
- இடையே -
D. சங்கர், த/பெ. தேவராஜ்,
க.எண். 1/183, சத்யா நகர்,
அஞ்சல் அலுவலக சாலை,
உடையாப்பட்டி, சேலம் -140.
...... எதிரி

**அறிவிப்பு**

மேற்படி வழக்கின் புகார்தாரர் எதிரியாகிய உங்கள் மீது மேற்படி நீதிமன்றத்தில் மேற்படி வழக்கில் உங்களுக்கு எதிராக காசோலை மோசடி வழக்கு S.T.C. எண். 2067/2018-ஐ தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கானது, வருகின்ற **27-09-2023** அன்று காலை 10.30 மணிக்கு வாய்தா போடப்பட்டுள்ளது. எதிரியாகிய நீங்கள் 27-09-2023 அன்று நேரிலோ (அ) வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம். தவறும்பட்சத்தில் தங்களுக்கு எதிராக நீதிமன்றத்தால் தகுந்த உத்திரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

// கோர்ட்டார் உத்தரவுபடி //
**M. சுந்தரேஸ்வரன்,** B.Sc., B.L.,
வழக்கறிஞர், சேலம்.

**பொது அறிவிப்பு**
**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேட்டூர்**

இ.ம.சி.ப-727/2023 நாள்:19-09-2023
ல.பழனிசாமி
த/பெ லட்சுமணன் (லேட்)
161,பால மேட்டு
டேனிஷ் பேட்டை கிராமம்
காடையாம்பட்டி வட்டம்
சேலம்-636354.
..... மனுதாரர்.
// எதிர் //
வருவாய் கோட்டாட்சியர் ,
கோட்டாட்சியர் அலுவலகம்,
மேட்டூர்-636401
..... எதிர் மனுதாரர்.

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் ஆகிய நான் எனது தந்தை லட்சுமணன் (லேட்) என்பவர் கடந்த 22-12-2006 -ஆம் தேதியில் பாலமேடு, டேனிஷ் பேட்டை கிராமத்தில் உள்ள எங்கள் இல்லத்தில் இறந்து விட்டார். அவரது இறப்பு தற்போது பதிவு செய்யப்படவில்லை. [illegible]

ல.பழனிசாமி த/பெ லட்சுமணன்
க.எண்-161 பாலமேடு
டேனிஷ் பேட்டை கிராமம்,
காடையாம்பட்டி வட்டம்
சேலம் மாவட்டம்-636354
செல்-9486113850

**பொது அறிவிப்பு**
**வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மேட்டூர்**

இ.ம.சி.ப-728/2023 நாள்:19-09-2023
ல.பழனிசாமி
த/பெ லட்சுமணன் (லேட்)
161,பால மேட்டு
டேனிஷ் பேட்டை கிராமம்
காடையாம்பட்டி வட்டம்
சேலம்-636354.
..... மனுதாரர்.
// எதிர் //
வருவாய் கோட்டாட்சியர் ,
கோட்டாட்சியர் அலுவலகம்,
மேட்டூர்-636401
..... எதிர் மனுதாரர்.

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் ஆகிய நான் எனது தாயார் சித்தாயி (லேட்) என்பவர் கடந்த 20-04-2006 -ஆம் தேதியில் பாலமேடு, டேனிஷ் பேட்டை கிராமத்தில் உள்ள எங்கள் இல்லத்தில் இறந்து விட்டார். [illegible]

ல.பழனிசாமி த/பெ லட்சுமணன்
க.எண்-161 பாலமேடு
டேனிஷ் பேட்டை கிராமம்,
காடையாம்பட்டி வட்டம்
சேலம் மாவட்டம்-636354
செல்-9486113850

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# ஈரோடு மாவட்ட தொழில் மையம் சார்பில், 47 பேருக்கு ரூ.33.04 கோடி மதிப்பீட்டிலான வங்கி கடனுதவி மற்றும் மானியத்துடன் கூடிய கடனுதவிகள்

## அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்



**ஈரோடு,செப்.21-**

ஈரோடு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தொழில் மையம் சார்பில், 47 நபர்களுக்கு ரூ.33.04 கோடி மதிப்பீட்டிலான வங்கி கடனுதவி மற்றும் மானியத்துடன் கூடிய கடனுதவிகளை, கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா முன்னிலையில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார்.

இன்றைய விழாவில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் , மாவட்ட தொழில் மையம் சார்பில், வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், அண்ணல் அம்பேத்கார் தொழில் முன்னோடிகள் திட்டம், புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாடு திட்டம், பிரதம மந்திரியின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்துதல் திட்டம் மற்றும் தாட்கோ திட்டத்தின் கீழ் என 32 நபர்களுக்கு ரூ.712.54 இலட்சம் மதிப்பீட்டில் மானியத்துடன் கூடிய வங்கி கடனுதவியினையும் மற்றும் 14 நபர்களுக்கு ரூ.2592.36 இலட்சம் மதிப்பீட்டில் வங்கி கடனுதவிகளும் என 47 நபர்களுக்கு ரூ.3304.90 இலட்சம் மதிப்பீட்டிலான வங்கி கடனுதவி மற்றும் மானியத்துடன் கூடிய கடனுதவிகளை வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் , தமிழக மக்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காக, எண்ணற்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, புதிய தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில் மானியத்துடன் கூடிய பல்வேறு கடனுதவிகளை வழங்கி வருகிறார்கள். அதன்படி, இன்று (20.09.2023) கடனுதவிகளை பெறுகின்ற தொழில் முனைவோர்கள் நல்ல முறையில் தொழில் முன்னேற்றம் அடைந்து தங்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்திக் கொண்டு பயன் பெற வேண்டுமென தெரிவித்தார்.

தொடர்ந்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத் தீர்வை துறை அமைச்சர் , உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையின் சார்பில் ஒன்றிய அரசின் உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையம், உணவு பாதுகாப்பு நெறிமுறைகளை பின்பற்றி, சுகாதாரமாக பராமரிப்பு மேற்கொண்ட சத்தியமங்கலம் உழவர் சந்தை, ஈரோடு நேதாஜி தினசரி மார்கெட், கள்ளுக்கடைமேடு, அருள்மிகு பத்ரகாளியம்மன் கோயில், நசியனூர் அருள்மிகு மதுரகாளியம்மன் கோயில், மடத்துப்பாளையம் அங்கன்வாடி மையம் மற்றும் நஞ்சை ஊத்துக்குளி அம்மன்நகர் அங்கன்வாடி மையம் உள்ளிட்டவைகளுக்கு, தரச்சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

இந் நி கழ் வின் போது, மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் மணிகண்டன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் ஆனந்தகுமார், மாவட்ட நியமன அலுவலர் (உணவு பாதுகாப்புத்துறை) தங்க விக்னேஷ், துணை இயக்குநர் (வேளாண்மை விற்பனை) மகாதேவன், தலைவர் (ஈரோடு மாவட்ட சிறுதொழில் சங்கம்) திருமூர்த்தி, வங்கியாளர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஊட்டியில் விநாயகர் விசர்ஜன ஊர்வலம்



**ஊட்டி, செப் 21-**

ஊட்டியில் ஊர்வலமாக கொண்டு வரப்பட்ட 90 விநாயகர் சிலைகள் காமராஜ் அணையில் கரைக்கப்பட்டது.

நீலகிரி மாவட்டத்தில் விநாயகர் சதுர்த்தி விழா கடந்த 18-ந் தேதி கொண்டாடப்பட்டது. இதையொட்டி இந்து முன்னனி, சிவசேனா, விஸ்வ இந்து பரிஷத், இந்து மக்கள் கட்சி சார்பில் சுமார் 500 விநாயகர் சிலைகள் வைத்து பிரதிஷ்டை செய்யப்பட்டது. அங்கு பக்தர்கள் வழிபாடு நடத்தி, தரிசனம் செய்தனர். பொது இடங்களில் வைக்கப்பட்ட சிலைகளுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

இந்தநிலையில் நேற்று ஊட்டியில் பிரதிஷ்டை செய்த விநாயகர் சிலைகள் விசர்ஜன ஊர்வலம் நடைபெற்றது. ஊட்டி தேவாங்கர் மண்டபத்தில் இருந்து ஊர்வலம் தொடங்கியது. இதில் இந்து முன்னணி உள்பட பல்வேறு அமைப்புகளை சேர்ந்த 90 சிலைகள் வேன்களில் வைத்து ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது.

மேளதாளம் முழங்க வாகனங்களில் விநாயகர் சிலைகள் சேரிங்கிராஸ், கமர்சியல் சாலை, காபிஹவுஸ் ரவுண்டானா, மார்க்கெட், மெயின் பஜார், மின்வாரிய ரவுண்டானா வரை ஊர்வலம் நடந்தது. இதையடுத்து போலீஸ் சூப்பிரண்டு பிரபாகர் தலைமையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புடன் ஊட்டி அருகே காமராஜ் அணைக்கு சிலைகள் கொண்டு செல்லப்பட்டன. மேலும் துப்பாக்கி ஏந்திய சிறப்பு படையை போலீசார், ட்ரோன் கேமரா கண்காணிப்பு உள்ளிட்டவையும் இருந்தது.

இதைத்தொடர்ந்து காமராஜர் அணைக்கு கொண்டு செல்லப்பட்ட விநாயகர் சிலைகள் தீயணைப்பு வீரர்கள் உதவியுடன் படகு மூலம் அணையில் கரைக்கப்பட்டது. வீடுகளில் வைக்கப்பட்ட சிலைகளும் கரைக்கப்பட்டன. ஊட்டியில் விசர்ஜன ஊர்வலம் நடந்ததால், முக்கிய வீதிகளில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டு இருந்தது. இன்று (வியாழக்கிழமை) விசுவ இந்து பரிசத் சார்பில், விநாயகர் சிலை ஊர்வலம் நடக்கிறது.

## வெள்ளாளபாளையம் பகுதியில்

# டெங்கு மற்றும் புகையிலை தடுப்பு விழிப்புணர்வு முகாம்



**ஈரோடு செப்.21-**

ஈரோடு மாவட்டம் கோபி வட்டாரம் பா. வெள்ளாளபாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய பகுதிக்கு உட்பட்ட வெள்ளாள பாளையம் பகுதியில் மகாத்மா காந்தி 100 நாள் வேலை உறுதித் திட்ட பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கும், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மாணவ, மாண வி யர் க ளுக் கும் டெங்கு மற்றும் புகையிலை தடுப்பு விழிப்புணர்வு. நேற்று முகாம் நடைபெற்றது. இம் முகாமில் டெங்கு காய்ச்சல் பரவும் விதம், கொசு உற்பத்தி தடுப்பு வழி முறைகள், காய்ச்சல் கண்டவர்களுக்கு உடனடியாக இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டிய அவசியம், பாதுகாப்பான குடிநீர் வழி முறைகள், மழைக்கால நோய்கள் மற்றும் பாதுகாப்பு முறைகள், புகையிலை பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள், உடல் பாதிப்புகள், புற்றுநோய் பாதிப்புகள் புகையிலை தடுப்பு சட்டங்கள், புகையிலை பழக்க மீட்பு ஆலோசனை, மக்களைத் தேடி மருத்துவம் திட்ட நோக்கம் மற்றும் பயன்பாடுகள், உயர் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் பரிசோதனையின் அவசியம், சிறுதானிய உணவு வகைகள் மற்றும் ஊட்டச்சத்து உணவு முறைகள் குறித்து விளக்கமாக சுகாதார நலக்கல்வி வழங்கப்பட்டது.

மேலும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் டெங்கு தடுப்பு சுகாதார ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த இரு வேறு நிகழ்வுகளில் ஈரோடு மாவட்ட துணை இயக்குனர் சுகாதாரப் பணிகள் அலுவலக மாவட்ட நலக் கல்வியாளர் சிவகுமார், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் செல்வம், சுகாதார ஆய்வாளர்கள் நவீன் குமார், பொதுமக்கள் மற்றும் 100 நாள் வேலை உறுதித் திட்ட பணியாளர்கள் 70 பேர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் 120 பேர்கள் கலந்து கொண்டனர்.

அனைவராலும் டெங்கு தடுப்பு, புகையிலை ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.

# சத்தியமங்கலம் பகுதியில் உள்ள சவர்மா கடைகள்,அசைவ உணவகங்களில் ஆய்வு



**ஈரோடு செப்21**

சத்தியமங்கலம் உணவு பாதுகாப்பு அலுவலர் மற்றும் சத்தியமங்கலம் நகராட்சி அதிகாரிகள் இணைந்து சத்தியமங்கலம் பகுதியில் உள்ள சபர்மா கடைகள் , அசைவ உணவகங்களில் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு சுகாதாரத் துறை அமைச்சர், சுகாதாரத்துறை செயலாளர் ,உணவு பாதுகா ப்புத் துறை ஆணையர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரின் ஆணைப்படியும் நியமன அலுவலரின் உத்தரவு படியும் சத்தியமங்கலம் பகுதியில் உள்ள சவர்மா கடைகள் மற்றும் அசைவ உணவகங்களில் உணவு பாதுகாப்பு அலுவலர் மற்றும் நகராட்சி அலுவலர்களுடன் இணைந்து ஆய்வு மேற்கொண்டார் ஆய்வில் சவர்மா கடைகளில் *(Marinated chicken)* மேரினேட்டட் சிக்கன் எனப்படும் மசாலா தடவிய பழைய சிக்கன் 2 கிலோ குளிர் சாதன பெட்டியில் வைத்திருந்தது கண்டறியப்பட்டது செயற்கை கலர் பவுடர் கலந்து தயாரித்த சில்லி சிக்கன் ஆகியவை கண்டறியப் பட்டு பறிமுதல் செய்து அளிக்கப்பட்டது மேலும் சில்லி சிக்கனுக்கு கலர் பொடிகள் பயன்படுத்தக்கூடாது எனவும் அஜினா மோட்டா பயன்படுத்தக் கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டது கேரி பேக் பயன்படுத்தக்கூடாது எனவும் அறிவுறுத்தப்பட்டது. தினமும் பிரஷ் ஆன சிக்கன்கள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது செயற்கை கலர் பவுடர் பயன்படுத்தி சிக்கன் சில்லி தயாரித்த இரண்டு கடைகளுக்கு தலா 1000 ரூபாய் வீதம் 2000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது உணவு குறைபாடுகள் சம்பந்தமான புகார்கள் தெரிவிக்க 944042322 என்ற எண்ணில் புகார் தெரிவிக்கலாம் எனவும் மாவட்டம் முழுவதும் தொடர் ஆய்வு மேற்கொள்ளப்படும் எனவும் மாவட்ட உணவு பாதுகாப்பு துறை நியமன அலுவலர் மருத்துவர் தங்க விக்னேஷ் தெரிவித்தார்.

# விளையாட்டு மற்றும் கலை போட்டி நந்தா அலைய்ட் ஹெல்த் சயின்ஸ் கல்லூரி மாணவர்கள் சாதனை



**ஈரோடு செப் 21**

கோவை நேரு இன்ஸ்டிட்யூட் ஆப் அலைய்ட் ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் சார்பில் அனைத்து கல்லூரி மாணவ-மாணவிகளுக்கு இடையேயான தேசிய அளவிலான விளையாட்டு மற்றும் கலை போட்டிகள் அண்மையில் முறையில்நடைபெற்றது. இதில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து 23 கல்லூரிகளைச் சார்ந்த சுமார் 720 மேற்பட்ட மாணவ-மாணவியர்கள் இப் போட்டிகளில் கலந்துக் கொண்டார்கள்.

விளையாட்டு போட்டிகளில் பல்வேறு சுற்றுகளை கடந்து, ஆடவர்களுக்கான பிரிவில் 200 மீட்டர் மற்றும் 4 x 100 தொடர் ஓட்ட பந்தயங்களில் முதலிடத்தினையும், 100 மீட்டர், மற்றுட் சதுரங்கள் போட்டிகளில் இரண்டாம் இடத்தினையும், பெண்களுக்கான பிரிவில் 200 மீட்டர் ஓட்டம் மற்றும் கோ...கோ போட்டிகளில் இரண்டாம் இடத்தினையும், பெண்களுக்கான குண்டு எறிதல் மற்றும் தட்டு எறிதல் போட்டியில் மூன்றாம் இடத்தினையும் தக்க வைத்துக் கொண்டர்கள்,

மேலும், கலை போட்டிகளில், சோப்பு செதுக்குதல், ஆடை அலங்கார அணிவகுப்பு,மைம் மற்றும் பென்சில் கலை ஆகிய போட்டிகளில் முதல் இடத்தினையும் தக்க வைத்துக் கொண்டார்கள். இவ்வாறாக மாணவர்கள் விளையாட்டு மற்றும் கலைப் போட்டிகளில் அதிகபடியான முதல் இடங்களை தக்க வைத்துக் கொண்டதன் அடிப்படையில் ஒட்டு மொத்த சாம்பியன்பட்டத்தினை வென்று சாதனை புரிந்துள்ளார்கள்.இச்சாதனைகளை நிகழ்த்திய மாணவ-மாணவிகளையும், அதற்கு உறுதுணையாக வழி நடத்திய முதல்வர் மருத்துவ வி. மணிவண்ணன் மற்றும் பேராசிரியர்களையும் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் வி. சண்முகன் மற்றும் செயலர்.எஸ்.நந்தகுமார் பிரதீட்ட நந்தா கல்வி நிறுவனங்களின் செயலர்.எஸ்.திருமூர்த்தி, முதன்மை கல்வி அதிகாரி முனைவர் எஸ். ஆறுமுகம் மற்றும் முதன்மை நிர்வாக அலுவலர் முனைவர் . கே. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பாராட்டினார்கள்.

# சிறு தேயிலை விவசாயிகளை காப்பாற்றுங்கள் இயக்கம் சார்பில் ஊட்டியில் கவன ஈர்ப்பு போராட்டம் நடத்த முடிவு




**ஊட்டி, செப்.21-**

பசுந்தேயிலைக்கு உரிய விலை வழங்க கோரி சிறு தேயிலை விவசாயிகளை காப்பாற்றுங்கள் இயக்கம் சார்பில் ஊட்டியில் கவன ஈர்ப்பு போராட்டம் நடத்த விவசாயிகள் முடிவு செய்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் 60 சதவீதத்திற்கும் மேற்பட்டவர்கள் தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளாக பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்காத நிலையில், விவசாயிகள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இந்நிலையில் தேயிலைக்கு உரிய விலை வழங்க கோரி தற்போது பல்வேறு அமைப்புக்களை சேர்ந்தவர்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். எனினும், மத்திய அரசு கண்டுக் கொண்டதாக தெரியவில்லை. இந்நிலையில், நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு அமைப்புக்களை ஒன்று திரட்டி ஒரு இயக்கமாக மாற்றி, பசுந்தேயிலைக்கு உரிய விலை வழங்க கோரி போராட்டங்களை முன்னெடுப்பு என விவசாயிகள் முடிவு செய்துள்ளனர்.

இதற்காக தற்போது சிறு தேயிலை விவசாயிகளை காப்பாற்றுங்கள் என்ற ஒரு இயக்கத்தை தொடங்கியுள்ளனர். இந்த இயக்கத்தின் தொடக்க நிகழ்ச்சி நேற்று உதகையில் நடந்தது. நிகழ்ச்சிக்கு ஒருங்கிணைப்பாளர் ஜே.பி.சுப் பி ர ம ணி யம் தலைமை வகித்தார். சமுதாய தலைவர் ஐய்யாரு உட்பட பல்வேறு கிராமங்களை சேர்ந்த தலைவர்கள் மற்றும் பல்வேறு அமைப்புக்களை சேர்ந்தவர்கள் கலந்துக் கொண்டனர். கூட்டத்தில், பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்க மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தி போராட்டங்களை முன்னெடுப்பது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது. மேலும், விரைவில் தேயிலைக்கு உரிய விலை வழங்க கோரி உதகையில் விவசாயிகளை திரட்டி போராட்டம் நடத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

ஒ ருங் கி ணைப் பா ளர் ஜே.பி.சுப்பிரமணியம் கூறியதாவது, பசுந்தேயிலைக்கு உரிய விலை வழங்க கோரி விவசாய சங்களை சேர்ந்தவர்கள் தனித்தனியாக போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனால், எவ்வித பயனும் ஏற்படவில்லை.

எனவே, நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மற்றும் பல்வேறு அமைப்புக்களை ஒன்று திரட்டி சிறு தேயிலை விவசாயிகளை காப்பாற்றுங்கள் என்ற இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த இயக்கத்தின் மூலம் இனி வரும் காலங்களில் போராட்டங்கள் நடத்தப்படும். இன்று (நேற்று) நடந்த கூட்டத்தில் பசுந்தேயிலை கிலோவுக்கு ரூ.35 வழங்க வலியுறுத்தி மத்திய மாநில அரசுகளுக்கு கோரிக்கை வைப்பது, அதுவரை நியாயமான விலை வழங்க வேண்டும். பசுந்தேயிலைக்கு விலை நிர்ணயம் செய்ய நிபுணர் குழுவை அமைக்க வேண்டும்.

இது தொடர்பாக தமிழக முதல்வரை சந்தித்து மனு அளிப்பது என முடிவு செய்யப்பட்டது. மேலும், மத்திய அரசையும் சந்தித்து பசுந்தேயிலைக்கு விலை வழங்க கோரி, மத்திய அமைச்சர்களை சந்திப்பது எனவும், பசுந்தேயிலைக்கு உரிய விலை வழங்க கோரி விரைவில் மத்திய மாநில அரசுகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் கவன ஈர்ப்பு போராட்டம் நடத்தப்படும், என்றார். இந்த கூட்டத்தில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பல்வேறு விவசாய சங்கங்களை சேர்ந்தவர்கள், விவசாயிகள் மற்றும் பல்வேறு அமைப்புக்களை சேர்ந்தவர்கள் கலந்துக் கொண்டனர்



**கோவை மாநகராட்சி ஆணையாளர் பிரதாப் உத்தரவுபடி மத்திய மண்டலம் வார்டு எண் 83க்குட்பட்ட ரேஸ்கோர்ஸ் பகுதியில் டெங்கு கொசு ஒழிப்பு புகை மருந்து அடிக்கும் பணியில் மாநகராட்சி பணியாளர்கள் ஈடுபட்டனர்.**

# தங்காடு ஓரநள்ளி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கூடுதல் கட்டிடம் கட்ட பூமி பூஜை



**ஊட்டி, செப்.21-**

பாலகொலா ஊராட்சி, தங்காடு ஓரநள்ளியில் 35 படுக்கை வசதி கொண்ட அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது.

இந்த ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்துள்ள பாலகொலா ஊராட்சியில் ஆண்கள் 9760 பேரும், பெண்கள் 10224 - பேரும் வசித்து வருகின்றனர்.. இவர்கள் அனைவரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைதான் முதலுதவி மற்றும் மகப்பேறு பிரசவம் மற்றும் பல நோய்களுக்காக சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த நிலையில் தமிழக அரசு பாலகொலா ஊராட்சியில் வசிக்கும் மக்களின் கோரிக்கையை ஏற்று கூடுதல் கட்டிடம் கட்ட அனுமதியளித்ததன் அடிப்படையில் நேற்று 20-09-2023 - புதன்கிழமையன்று பூமி பூஜை நடைப்பெற்றது . தங்காடு ஓரநள்ளி அரசு ஆரம்ப சுகாதாரத்துறை மருத்துவமனை வளாகத்தில் நடைப்பெற்ற பூமி பூஜை பாலகொலா ஊராட்சி துணைத்தலைவர் மஞ்சை. வி.மோகன் தலைமையில் நடைப்பெற்றது. இந்நிகழ்வில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் நவீன் ராஜ் முன்னிலை வகித்தார். பூமி பூஜையை தங்காடு ஊர்த்தலைவர் அமர்நாத் பூஜை செய்து துவக்கி வைத்தார். முன்னதாக விழாவிற்கு வந்தவர்களை தங்காடு வார்டு உறுப்பினர் ராஜேந்திரன் வரவேற்றார். முடிவில் பாலகொலா ஊராட்சி செயலாளர் கார்த்திக் நன்றி கூறினார். இந் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஒப்பந்ததாரர் எமரால்டு சரவணன் செய்திருந்தார். இப் பூமி பூஜையில் மருத்துவர்கள், செவிலியர் மற்றும் பொது மக்கள் திரளானோர் கலந்துக்கொண்டனர்.

## ஈரோடு மாவட்டத்தில்

# 38 ஓட்டல்களில் உணவு பாதுகாப்பு துறை அதிகாரிகள் ஆய்வு: 34 கிலோ கெட்டுப்போன இறைச்சி பறிமுதல்



**ஈரோடு செப்21**

நாமக்கல்லில் 'சவர்மா', தந்தூரி சிக்கன் சாப்பிட்ட 9-ம் வகுப்பு மாணவி கலையரசி உயிரிழந்தார். மேலும் சிலர் உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் தமிழ்நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது

இந்தநிலையில் ஈரோட்டில்உள்ள ஓட்டல்களில் உணவு பாதுகாப்பு அதிகாரிகள் அதிரடி ஆய்வு நடத்தினர். ஈரோடு மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அதிகாரி தங்கவிக்னேஷ் தலைமையில் அதிகாரிகள் செல்வம் அருண்குமார் ஆகியோர் ஈரோடு பெருந்துறை ரோட்டில் உள்ள ஒரு பிரபல ஓட்டலில் திடீர் ஆய்வு செய்தனர். அப்போது சமையல் அறையில் வைக்கப்பட்டிருந்த உணவு பொருட்களை அதிகாரிகள் எடுத்து பார்வையிட்டனர். அதில் நேற்று மீதமான சமைக்கப்படாத கோழி, ஆடு, மீன் இறைச்சிகள் 'பிரீசரில்' வைக்கப்பட்டு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அந்த இறைச்சிகளை எடுத்து அதிகாரிகள் பார்வையிட்டபோது, அது கெட்டுப் போயிருந்தது தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து அதில் இருந்த மசாலா தடவிய மீன், இறால், கோழி போன்ற இறைச்சி உணவுகளை குப்பை தொட்டியில் கொட்டி 'சோப் ஆயில்' ஊற்றி அதிகாரிகள் அழித்தனர்.

இதுகுறித்து மாவட்ட உணவு பாதுகாப்பு அதிகாரி தங்கவிக்னேஷ் கூறியதாவது:- ஈரோட்டில் உள்ள அசைவ ஓட்டல்களில் திடீர் ஆய்வு நடத்தப்பட்டது. இதில் 27 கிலோ கெட்டுப்போன இறைச்சி பறிமுதல் செய்யப்பட்டு, 3 ஓட்டல்களுக்கு விளக்கம் கேட்டு நோட்டீசு அளிக்கப்பட்டு உள்ளது. மேலும், 3 ஓட்டல்களுக்கு தலா ரூ.2 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

